**தேசிய வடிவமைப்பு நிலையம் - 2022**

---------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் ("நிலையம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிலையத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிலையத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிலையத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 | | |
| (அ) | மீளாய்வாண்டில் ரூபா 9,557,494 ஆன மூலதன மானியம் நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரிசெய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மூலதன மானியத்திற்காக மீளாய்வாண்டின் ரூபா 11,075,033 காலக்கழிவு பெறுமதி நிதிக் கூற்றுக்களில் | 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரிசெய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 3,323,435 மிகையொன்று நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டது. மேலும், கடந்த ஆண்டின் மூலதன மானிய திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட வேண்டிய போதும், அதற்கு முரணாக நிதி நிலைமைக் கூற்றில் மூலதன மானியமாக ரூபா 109,431,667 காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | சொத்துக்களில் 04 வகைகளின் கிரயம் | 62,612,120 | 48,638,769 | 13,973,351 | இந்த சொத்து வகுப்புக்களுக்குரிய நிலையான சொத்து பதிவேடு பராமரித்தல் 2008 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், பழைய சொத்துக்கள் அந்த சொத்து பதிவேடுகளில் உள்ளடக்கப்படாமைக்கு காரணம் ஆகும். எதிர்காலத்தில் மீள்மதிப்பீடு செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | வேறுபாடுகளை இனங்கண்டு மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பூர்த்தி இருப்புக்களை அகற்றும் பெறுமதி | 156,274 | 6,635 | 149,639 | 2022 இன் பொருள் மெய்மெய்யாய்வின் பிரகாரம் இனங்காணப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்கள் விற்பனை செய்ய முடியுமாக இருந்த | இருப்புக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

போதிலும், அந்த பொருட்களின் கிரயத்தை விட குறைந்த பெறுமதியில் விற்பனை செய்யக் கூடியதாக இருந்தமையால் அவற்றை பூர்த்தி இருப்புக்களில் குறைத்து காண்பிக்கப் பட்டுள்ளது.

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய மீதியின் கீழ் காண்பிக்கப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 344,261 ஆன 09 மீதிகள் 03 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும், அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை. | ரூபா 344,261 ஆன மீதிகளுக்கு இடையே ரூபா 239,250 தொகை லக்சல நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்ட மாதிரி பொருட்களுக்காக அறவிட வேண்டிய பணமாக இருந்ததுடன், அறவிடுவதற்காக மீள் நினைவூட்டல் மேற்கொள்ளப்பட்ட போதும், கொடுப்பனவு செய்தல் தாமதமாகியிருந்தது. | பெற வேண்டிய மீதிகளை தாமதமின்ற அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சிகளுக்காக | வரைவு வருடாந்த ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் அதாவது பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு | பதவி அணியினரின் பற்றாக்குறை மற்றும் பொருள் மெய்மெய்யாய்வை பூர்த்தி செய்வதற்கு காலம் எடுத்தமை தாமதத்திற்கு தாக்கமளித்திருந்ததுடன், எதிர்வரும் ஆண்டின் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் | சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் தாமதமாகி 2023 ஏப்ரல் 19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | போது இந்த குறைபாடுகளை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,323,435 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,902,973 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,579,538 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய வருமானம் ரூபா 7,790,237 இனால் அதிகரித்தமை மற்றும் மொத்த செலவினம் ரூபா 13,350,075 இனால் குறைவடைந்தமை காண்பிக்கப்பட்ட போதும், திறைசேரி மானியம் மற்றும் அமைச்சின் நிதிய பெறுவனவுகள் ரூபா 24,152,935 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிலையத்தின் வருடாந்த திட்டத்தின் பிரகாரம் புதிய 500 வடிவமைப்புக்களை இனங்காண்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 2022 திசெம்பர் மாதத்தில் வழங்கப்பட்ட நிதி மற்றும் பௌதீக செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் வடிவமைப்பாளர்களுக்கு புதிய 189 வடிவமைப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அது 38 சதவீதம் ஆன குறைந்த சதவீதம் ஆகும். | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது 35 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக புதிய வடிவமைப்புக்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட போதும் திட்டத்தை திருத்தியதால் 18 நிகழ்ச்சித் திட்டங்களை மாத்திரம் செய்வதற்கு முடியுமாக இருந்தது. அதன் பிரகாரம் 35 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வழங்க வேண்டிய 18 வடிவமைப்புக்களுக்கு மாத்திரம் வழங்குவதற்கும் நாட்டில் காணப்பட்ட சிக்கலான நிலைமையின் பிரகாரம் பயிலுனர்களை பயிற்சிவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வருகை போதியளவான மட்டத்தில் காணப்படாமையினால் வடிவமைப்புக்களை குறைவாக வழங்குவதற்கு ஒரு காரணமாகும். | மதிப்பீட்டின் பிரகாரம் இலக்கை அடைந்து கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிலையத்தால் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைத்த ரூபா 51,313,305 தொகையில் ரூபா 36,507,029 அதாவது செயற்திட்ட தொகையில் 71 சதவீதம் 2015 முதல் 2019 காலப் பகுதியில் செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த தொகை வடிவமைப்பாளர்களை மேம்படுத்தும் நோக்கில் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தப்பட்டதா என பரீட்சிப்பதற்கு செயற்திட்ட அறிக்கை அல்லது ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்தினதும் செயலாற்றல் மற்றும் செயல் முன்னேற்றத்தை பரீட்சித்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த செயற்திட்டத்தில் இருந்து கிடைத்த பணத்தில் ரூபா 10,584,174 அதாவது, மொத்த பெறுவனவில் 20 சதவீதம் செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு முரணான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் பணிகள் ஐக்கய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் ஏற்றுக் கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் நிகழ்ச்சித் திட்டங்களின் சிக்கனமாக நிறுவனத்திற்கு எஞ்சிய தொகையில் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன், நிறுவனத்தின் சில பணிகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் சிறந்த மேற்பார்வை நிகழ்ச்சித் திட்டத்துடன், பணத்தை ஈடுபடுத்தி அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிதியம் உரிய நோக்கங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் போது பெறுமதி ரூபா 735,000 ஆன 03 மடி கணனிகள் மற்றும் ரூபா 42,000 பெறுமதியான 02 Hard Disk தகவல் தொழில்நுட்ப அலகை ஸ்தாபிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் அந்த பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்காக நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் சேவையில் இருந்து விலகிச் சென்றதன் பின்னர் சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய உத்தியோகத்தரை ஆட்சேர்த்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதன் காரணமாக இந்த பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் தற்போது களஞ்சியத்தில் எஞ்சியுள்ளது. தற்போது புதிய கொள்வனவுகள் | தகவல் தொழில்நுட்ப பிரிவை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வரையறுக்கப்பட்டமையால் 2022 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட கணனி தேவைகளுக்காக இந்த கொள்வனவு செய்யப்பட்ட 02 கணனிகளும் வழங்கப்பட்டுள்ளது. | |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரம்பு மற்றும் மூங்கில் தளபாட பிரிவிற்காக 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 255,000 பெறுமதியான மூங்கில் ஸ்டீமர் இயந்திரம், கூட்டுப் பெறுமதி ரூபா 387,639 ஆன கமரா, 02 டெப், 02 மடி கணனிகள் இரண்டு வருடங்கள் முதல் ரூபா 148,200 பெறுமதியான வாயு அடுப்பு மற்றும் நிர்மாண கிரயம் இனங்காணப்படாத விறகு அடுப்பு என்பன 19 வருட அளவிலான காலத்தில் இருந்து விளைவற்று காணப்பட்டது. | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பொது முயற்சிகள் மற்றும் தேசிய கைப்பணி சபை ஒன்றிணைந்து மூங்கில் ஸ்டீமர் இயந்திரம் பயினுனர்களுக்காக பயன்படுத்தக் கூடிய வகையில் பதிவுச் சான்றிதழ் ஒன்றுடன் வழங்குவதற்கு கலந்துரையாடப்படுகின்றது. சேவையில் இருந்து நீங்கிய உத்தியோகத்தர்கள் இரண்டு பேர்களும் பயன்படுத்திய உபகரணங்களாக இருந்ததுடன், புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படாமையினால் அந்த உபகரணங்கள் களஞ்சியத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. கல்வி கற்கின்ற மாணவர்களின் கற்கை நடவடிக்கைகளுக்காக மற்பாண்ட பொருள் உலையை பயன்படுத்தப்படுகின்றமையால் அதனை மாற்றியமைத்து மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களில் இருந்து உச்ச பயனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |